**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

ஸ்ரீராமஜயம்.

திருஞானமுத்திரைக்
கோவை 7

# திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்.

(சுவடியிலிருந்தது)

பாளையங்கோட்டை செயின்ட்சேவியர் கலாசாலைத்
தமிழாசிரியரும், நெல்லைத் தென்னிந்திய
தமிழ்ச்சங்கப் பரீக்ஷகருமான
S. திருமலைச்சாமி அய்யங்கார் ஸ்வாமியால்,
பார்வையிடப்பட்டு,
ஆழ்வார்திருநகரி (ஸ்வாமி ஆதிநாதராழ்வார்
ஸந்நிதிஸ்தானிகரும், ஸ்வாமி தெற்குத் திருவேங்கட
முடையான், அழகர், ஸ்ரீராமன் ஸந்நிதிகளின்
சொந்தக்கார பாத்தியஸ்தர்களி லொருவருமான)
பெரியன் தேசிகமய்யங்கார் என்ற பெரியன் வெங்
கிட்டநாராயணய்யங்கார் குமாரர்
(திருஞான முத்திரைப்பிரசுராலய சொந்தக்கார
காரியஸ்தன்)
பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்காரால்,
வெளியிடப்பட்டது.

ஸ்ரீகான வித்யா பிரஸ்,
ஸ்ரீவைகுண்டம்.

14—5—1932.

பதிப்பிக்கும் உரிமை
வெளியிட்டவருக்கு.

விலை அணா
நான்கு

# பதிப்புரை.

இந்நூல் அச்சிட்டு முற்றுறுந்தருவாயில் இதை இயற்றியவரைப்பற்றி அறியக்கிடைத்ததையும் பிழைதிருத்தமும்சேர்க்கவாய்த்தது. இனிவெளிவரவிருக்கும் நம்மாழ்வார் பள்ளில் "விண்டலத்தோர் புகழ்ந்தேத்துந் தமிழ்ப் பேரை வேந்தன் கல்விக், கொண்டலியற்றிருமேனி வயித்தியநாதன் பதமேற்கொண்டு வாழ்த்தி" என்றிருப்பதால், மாறன் அலங்கார உரைசெய்தவராகிய திருமேனி இரத்னக்கவிராயர் வம்சத்தினராகிய திருமேனி வயித்தியநாதன் என்பாரின் மாணாக்கர்களில் ஒருவர்தான் இதை இயற்றியவர் என நிச்சயிக்கலாம். மாறன் அலங்கார உரையாசிரியரை "வருகாரி ரத்னகவிராயன் பேரை வரோதயனே." என்ப.

பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாஸன்.

ஸ்ரீராமாநுஜாய நம:

திருஞானமுத்திரைக்
கோவை 7

# திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்.

(சுவடியிலிருந்தது)

பாளையங்கோட்டை செயின்ட்சேவியர் கலாசாலைத்
தமிழாசிரியரும், நெல்லைத் தென்னிந்திய
தமிழ்ச்சங்கப் பரீக்ஷகருமான

S. திருமலைச்சாமி அய்யங்கார் ஸ்வாமியால்,

பார்வையிடப்பட்டு,

ஆழ்வார்திருநகரி (ஸ்வாமி ஆதிநாதராழ்வார்
ஸந்நிஸ்தானீகரும், ஸ்வாமி தெற்குத் திருவேங்கட
முடையான், அழகர், ஸ்ரீராமன் ஸந்நிதிகளின்
சொந்தக்கார பாத்தியஸ்தர்களி லொருவருமான)
பெரியன் தேசிகமய்யங்கார் என்ற பெரியன் வெங்
கிட்டநாராயணய்யங்கார் குமாரர்
(திருஞான முத்திரைப்பிரசுராலய சொந்தக்கார
காரியஸ்தன்)

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்காரால்,

வெளியிடப்பட்டது.

---

ஸ்ரீகான வித்யா பிரஸ்,
ஸ்ரீவைகுண்டம்.

---

14—5—1932.

பதிப்பிக்கும் உரிமை
வெளியிட்டவருக்கு.

விலை அணா
நான்கு.

ஸ்ரீராமஜயம்.



# முகவுரை.

ஸ்ரீ நம்மாழ்வார் அவதரித்ததும், அதின் நிமித்தம் வைஷ்ணவ ஸ்தலங்களுள் முக்ய ஏற்றமடைந்ததுமான குருகாபுரி என்ற ஆழ்வார்திருநகரி யென்னும் திருப்பதியில், ஆதிகாலமுதல் தமிழ் நூல்வல்ல விஷ்ணுபக்தர்கள் பலர்தோன்றி, அவ்வாழ்வார் பேரிலியற்றியுள்ள நூல்கள் பலவுள. அவற்றில், அநேகம் அச்சிடப்படாமலும், பிற்காலத்தவர் கவனக்குறையால், ஏட்டுப்பிரதிகள் கூட செவ்வையாகப் பாதுகாக்கப்படாமலு மிருந்துவருகின்றன. அவைகளை எவ்விதமாவது தேடிவெளியிடவேண்டுமென்று முயற்சி செய்து வருபவர்களில் ஒருவரான பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார், சில வருஷங்களாகத் திருமாளிகைகளிலும், பழைய புலவர்களின்சந்ததியாரிடத்திலும், பலமுறை விசாரித்துத்தேடியெடுத்து அச்சிட்டுவருதில் "திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்" என்னும் இக்நூலின் ஏட்டுப்பிரதியொன்று, ஆழ்வார்திருநகரி திருவாய்

மொழிப்பிள்ளை மேலத்திருமாளிகை ஆசார்யஸ்வாமிகளிடமிருந்து, தேடி யெடுக்கப்பட்டு இப்போது அச்சிடப்பட்டிருக்கின்றது.

இந்நூலில் குருவணக்கத்திலிருந்து ஆழ்வார்திருநகரியிலேயே, இந்நூலாசிரியர்காலத்திலே, அனேகதமிழ் வித்வான்களிருந்ததாகத்தெரிகின்றது. இந்நூலாசிரியர் இன்னாரென்பதும், அவர் குரு வைத்தியநாதர் இன்னாரென்பதும், இப்பொழுது நன்கு விளங்கவில்லை. 'குறம்' என்னும் நூல் ஒன்றிரண்டுதான் அச்சிடப்பட்டு வழக்கில் உண்டு. இந்நூலில் அநேகம் சிந்துகவிகள் இப்பொழுது வழங்கும் சிந்துகவிகளைப்போலன்றி. ஒடிக்குஒடி வெவ்வேறு சந்தத்திலமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாசிரியர் பக்திமார்க்கத்திலும், சொற்சுவை, 'பொருட்சுவையுடன், கவிதைசெய்வதிலும் வல்லவரென்பது இந்நூலிலிருந்தே தெளிவாகும். சிலசிலபதங்களுக்கு தெளிவாகப் பொருள் விளங்கவில்லை. ஆயினும் ஏட்டுப்பிரதி எழுதினவரின் குற்றமோ, இல்லையோ, என்பதற்கு வேறு பிரதிகள் கிடையாமையாலும் ஆசிரியர் அரிய பதங்களை இடையிடையே கையாண்டுவருவதாலும் கிடைத்த நூலை, ஏட்டிலுள்ளபடியே அச்சிட்டு, குற்றங்குறைகளை தமிழ் வல்லோரைக்கொண்டு தீர்மானிக்க வேண்டுமென்ற அவாவாலும், கிடைத்தபடியே, அச்சிடப்பெற்றிருக்கிறது. தாய்ப்பாஷை விஷயத்திலும், நம்மாழ்வார் விஷயத்திலும் ஏற்பட்ட பக்தியால், பால்ய வயதிலேயே, பொருட்செலவு, பிரயாசங்களைக் கவனியாது ஊக்கத்துடன் இவ்வரிய நூல்களைத்தேடி வாங்கி, தமிழ்மக்களும், பக்திமான்களும், ஆனந்திக்கும்வண்ணம், பாடுபட்டுவரும், பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாசய்யங்கார் சிரத்தைப் போற்றத்தக்கது.

(Sd.) A. V. திருவேங்கடத்தய்யங்கார்,

தாசில்தார், திருச்செந்தூர்.

11—5—1932.

ஸ்ரீ சடகோபாயமங்களம்.

# திருக்குருகூர்மகிழ்மாறன்

# பவனிக்குறம்.

## காப்பு, வெண்பா

ஏறு புகழ்க்குருகை யெந்தைமகிழ் மாறனுக்குக்
கூறு பவனிக் குறம்பாடப்—பேறுதரு
பாய னடியிணைக்கீழ் வாழுங் கருடேசன்
தூயமலர்த் தாளே துணை. க

## குருவணக்கம், விருத்தம்.

பனுவல்முறை தொகுத்தினிய பயனுணர்ந்த குறுமுனியொப்
பாமே யென்ன
அனுதினமு மிலக்கியமு மிலக்கணமு மாணாக்கர்க்
களிக்கும் வள்ளல்
தனுவளர்த்த கருமுகிலைப் புகழ்குருகை வருமாறன்
தன்னை யல்லால்
மனிதர்தமைப் புகழாத வயித்தியநா தன்றுணைத்தாள்
வழுத்து வாமே. உ

## அவையடக்கம், விருத்தம்.

ஒப்பாரு மில்லாது நடம்புரியு மவர்தமைக்கண்
டுவகை கூர்ந்து
சப்பாணி தவழ்ந்துதவழ்ந் தாடுவே னெனத்துணிந்த
தன்மை போலும்
முப்பாலுந் தெரிந்துதமி ழினிதுரைப்பே னென்றுபுன்சொல்
முறையெண் ணமல்.
எப்பாரும் புகழ்படைத்த கவிவாணர் தங்கண்முனியான்
இயம்பு மாறே ௩

## குறத்திதோன்றுதல், விருத்தம்

கூந்தல்புறத் தவிழமணிப் புட்டி லேந்திக்
குழவிமருங் கணைத்துவிழி குழைமேற் றாவக்
காந்தளணி மலர்க்கையில் வரிவளைக ளார்ப்பக்
கமலபதத் தணிசிலம்பு புலம்பா நிற்ப
வேய்ந்தமகிழ்ப் பருதிதிருக் குருகை மாறன்
விரிபொருனை வளந்தழைக்க விளங்கு தென்பால்
போந்தகுறு முனிவனிசைத் தமிழா லோங்கும்
பொதியமலைக் குறத்திவந்து தோன்றி னாளே. 1

## குறத்தி கூறல், சிந்து

சீர்மரு வியதிரு மகள்தழுவுந்
திருமா லடிபர வியபெருமான்
போர்மத னன்பணி யுநம்மாழ்வார்
பொதியமலைக் குறத்தி நானம்மே. 2

மறையா கியநிறை திருமந்திர
முறையா லிசையா யிரந்தமிழ்தேர்
பொறைகூ ரிறைசெண் பகமாறன்
பொதியமலைக் குறத்தி நானம்மே. 3

## விருத்தம்

அவனி பாவுந் தமிழ்க்குருகை
யாழ்வா ரன்னப் பிடரில்வரும்
பவனி தொழுது மெலிந்தமடப்
பாவை மயிலை முகநோக்கி
எவன்நீ வருந்தி யிருப்பதனக்
கெல்லாம் உரைப்ப னின்பமுறத்
தவம்நீ செய்தாய் கலங்காதே
யென்று குறமான் சாற்றலுற்றாள். 4

## தலைவன்வளம், சிந்து

மருவுந்திரை பெருகுங்கடல் பருகி யுடல்கருகி
மஞ்சுதுஞ்சிய பொதியமாமலையான்—தமிழ்க்கலையான்
குருகும்நவ மணியுமிரு நிதியுங்கரை யருகே
கொழிக்குந்தண் பொருனைவள நதியான் பாகதியான் 5

வண்ணந்திகழ் மாடம்பொலி யன்னந்தருசாலை
வளருந்திரு வழுதிவள நாடன்—மறையிடன்
மின்னும்பசும் பொன்னுமுத்தும் விளங்கும்பலவளங்கள்
மேவுங்குரு கூரான்—வரமி யாவுந்தருபோன் 6

மழைக்கார்முகில் தடவுமொரு புழைக்கார்பனைத்தடக்கை
மதவாரணத்திறையோனுயர் பதவாரணத்துறையோன்
கழைக்காமனை யளித்தோனருள் பிழைத்தார்முடியிடறுங்
கவனவயப்பரியான் எழு புவனம் வழுத்தரியான் 7

படியேழினு மடர்தீவினை மிடியால் வருகொடிய
பசியாற்றநின் றழைக்கு மன்னக்கொடியான் கதிர்
முடியான்
இடியும்பெரு மழையுங்கட லொலியும்நிக ரெனவே
யிகல்மும் முரசுடையான்மறை புகலும் மாசுடையான் 8

வண்டேழிசை கொண்டூறிய தண்டே மதுவுண்ணும்
மகிழ்மாலிகைத்தாரான் எழில் திகழ் மாமணித் தோன்
அண்டர்தனையுண்டேழுல களந்தோள் புவிபிளந்தோன்
ஆயனுனை மறப்பிலான்பல மாயமான பிறப்பிலான் 9

கருவாயுழல் கொடியேனையு முருவாமுறை வளர்த்தோன்
காரிதந்தருள் மாரிசெண்பகமாறன் வண்புகழ் கூறுகேன்
அருவாய்வெளியுருவாயுயாருளாய் நிறை பொருளாய்
அடங்காவிளக் கொளியோனலமடங்காவுளக் கொளி
யோன். 10

வெங்கண்மா மறவியுடல் பங்கம் படவுதைத்து
வேதன்சிரமறுத்தோர்கவியேதமெனவெறுத்தோன்
பொங்குந்தமிழ்ச் சங்கத்தவர்க் கங்கங்கவர் மனத்தே
பொருந்தவொரு கவியாகவேதிருத்த வரம்புரிந்தோன் 11

இடமேவியகடவாரணங்கொலை வேடனை மலையுந்
திருச்சங்கணித்துறையான் றமிழ் விரிச்சங்கணிமுறையான்
குடமாமெனு முலைமாதர்க ளிடமேமன நடையாக்
கொற்றவன்கதிபெற்றவன்மறைகற்றவன்எனையுற்றவன் 12
கஞ்சநான்முகன்முதலாயுள்ளவிஞ்சுதேவர்வாசஞ்செயும்
காணுர்மலர்த்தடரி மலைக்காவலன் தமிழ்நாவலன்
கொஞ்சுபூங்கிளி வஞ்சிதங்கிய குமரித்துறையுடையான்
குருகாப்பெரும்புகழான் அன்னைமறுகாற்பெறவிகழான்.

நகரலங்காரங்கூறல், விருத்தம்

வங்கநெடுங் கடலுடுத்த தரைமுழுதும் அநுதினமும்
வணங்கி வாழ்த்தப்
பொங்குமறை தழைத்தோங்க வளந்தழையுந்திருக்குருகா
புரியில் மானே
நங்கையருள் மெய்ஞ்ஞானச் சடகோப னப்பவனி
நடத்தும் நாளில்
அங்கங்கேமறுகுதொறும் அலங்கரிக்கும்பெருமையெல்லா
மம்ம கேளே. 14

நகரலங்காரம், சிந்து

கொடியோடிடக் கயங்குடை கட்டிடுவார்—மாட
கூடமணி மேடை யலங்கரிப்பார்
கடிகமழும் விதிபன்னீர் தெளிப்பார்—ஒங்கு
காவணங்கள் தோரணங்கள் அளிப்பார், 15

வாழைகமுகொடு கரும்பு நிரைப்பார்—சந்தனஞ்
வாரியே அண்டை கொண்டிறைப்பார்
தாழைமலர் மாலைபல நிரைப்பார்—நறுஞ்
சந்தனங் குங்குமங் கரைப்பார். 16

பத்திதொறு முத்துவடஞ் சேர்ப்பார்—வார்
பவனியெதி ரலங்கரித்துப் பார்ப்பார்
குத்து விளக்கணி தீபமிடுவார்—கும்ப
கூடமீது பூவிரிகள் நடுவார். 17

அரிசி—யும் வெள்ளிலையும் புரிவார்—வாச
வணிதாரும் புதுநீருஞ் சொரிவார்
வரிவளைக ளிருகையிலுந் தொடுவார்—தலை
வாசல் தொறும்மணி பூசலிடுவார் 18

எட்டு வரையதிர் முரசிரட்ட—நாளு
மிகலோக பரலோக மட்டுமங்கு
கொட்டி வருமத்தள மிடக்கை—நவுரி
கொம்புதவில் தாரை யொலிபம்ப 19

வேதசங் கீதமிடை பாட—வியல்
விந்தைபயில் வஞ்சியர்க ளாட
நாதமறை வாணர் புடை சூழ—விசை
நாவீறர் வீதிவரல் தொழவே 20

இலகுபல மணிகள் பூட்டி—நாளு
மிந்து நுதற் சிந்தூரந் தீட்டிக்
கலந விழிபுலவ மையெழுதி—நறுங்
கந்த பரிமள சந்தமுழுகி 21

காதுகவர் விரகவிழி மானே—பூங்
கனிகள் கனிந்தொழுகு செழுந்தேனே
போது கவர்குழல் மாதருடனே—இரு
புளக முலைகுழைய நடந்துடனே 22

மருக்குலவு திருக்குருகை மாறன்—வீதி
வரும்பவனி விரும்பியெதிர் சென்றாய்
திருக்குலவு முருக்கிதழ்வாயணங்கே! தற்
செயலன்றி மயல்கொண்டு நின்றாய் 23

எதையுவந் திருந்தனை பெண்ணரசே? விரும்பி
யேதேது நினைந்தனை சற்றுரைசெய்
கோதைநீ யருந்துயரங் கொண்டாய்—விள்ளக்
கூசுவதென் குறியதனாற் கண்டேன். 24

வன்னவளை தன்னை யிழந்தனையே—யுள்ளம்
வாடிமிக நாடி யுழந்தனையே
மின்னுமணி யாபரணந் தோற்றாய்—கூடி
விளையாடும் பூவைகிளி போற்றாய். 25

அங்கமெங்குந் தங்கநிறம் பொலிந்தாய்—வாரி
யலையிலலை மாறாக மெலிந்தாய்
மங்கையர்கள் தங்களினம் மறந்தாய்—அடங்கா
மடலியென்று முடலெடுக்கப் பிறந்தாய். 26

அன்றுமுத லின்றுசுற்றம் வரைந்தாய்—வருந்தி
அயனவில்மெழு கெனமனது கரைந்தாய்
குன்றுதனை வென்றதுணை முலையாய்—என்
குறிமுழுது மறியும்வகை யிலையால். 27

மலைவளங்கூறல், விருத்தம்

மெய்யாக வினைபுகழ்ந்து முழக்காளை மடித்துமுன்றில்
மேவி மோக
மையாரும் விழிமருட்டி யொருகைமுகஞ் சேர்த்தியம்மா
வாவா வென்றே
பையாரும் பாம்பணையிற் கண்டுயில்வோன் சரணமலர்
பரவு மாறன்
பொய்யாத புகழுரைக்குங் குறமாது பொதியவளம்
புகல லுற்றாள். 28

மலைவளம் சிந்து.

தெண்டிரைநீர் கொண்டுபெருங் கொண்டல்தவழ் மலையே
திங்கண்மும் மாரிதரும் துங்கசவ மலையே
அண்டமொடு புண்டரிக வயனுமுறை மலையே
ஆதவனும் அம்புலியும் அருந்தவஞ்செய் மலையே. 29

பொருத்தமுடன் மதகரிகள் பெருத்தகரு மலையே
புலியுடன்வெங் கரடிசிங்கம் மலியுமெங்கள் மலையே
கருத்திருண்ட மான்மரைக ளுருத்திரண்ட மலையே
கடமாவும் வரையாடும் நடமாடும் மலையே. 30

நெருக்கிவள ரிருப்பையுயர் வருக்கம்வளர் மலையே
நீண்டடர்ந்த புன்னாகங் கூண்டெழுந்த மலையே
மருக்கமழ்சந் தனமகிலைந் தருக்கிளரு மலையே
பராவுளிஞ்சி பாலைகுரா படருமெங்கள் மலையே. 31

துன்னுகன்னி காரமகிழ் மன்னிவளர் மலையே
தாலங்குசிறு தெங்கினங்க ளிலங்குமெங்கள் மலையே
பன்னிதென்ன மரங்குருந்து வன்னிவளர் மலையே
பயில்ஞான வசம்புவஞ்சி இயல்பான மலையே. 32

பாங்கில்வளர்ந் தோங்குகொன்றை நாங்குவளர் மலையே
பசுங்கடம்பு காஞ்சிநெல்லி விசும்படரும் மலையே
வேங்கைபலா குறிஞ்சிநிறைந் தோங்குமெங்கள் மலையே
விராவுநறை மருவுபுன்னை பரவுமெங்கள் மலையே. 33

இஞ்சிபல கிழங்குகொழி ஞ்சிவளர் மலையே
யேலமில வங்கமொடு சாலவளர் மலையே
மஞ்சளதி மதுரமிக மிஞ்சிவளர் மலையே
மாசில்லா மணிகளொளி வீசுமெங்கள் மலையே. 34

பூமாதும் புவிமாதும் போற்றுமெங்கள் மலையே
புதியபெரு நதிபுகவும் பொதியமா மலையே
ஆமாறு தவமுனிவ ரடைந்ததிரு மலையே
அகத்தியனார் வாழுமலைக் குறத்திநா னம்மே. 35

துங்கவட வரைபொருவு திங்கள்பயில் மலையே
தோகைநட மேவுமுயர் துடரியெங்கள் மலையே
மங்கையர்கள் துகில்கவர்ந்த செங்கண்மால் அருள்கூர்
மாறன்மலை வளமனைத்துங் கூறவரி தம்மே. 36

### நாட்டுவளங்கூறல், விருத்தம்

கொற்றமிகு சுடர்வாளும் கொடுங்கணையு மயில்வேலுங்
குறித்து நீலம்
பெற்றவரி விழிக்குயிலே! வுயிர்க்குயிரே யனப்பெடையே
பெண்ணே ! கண்ணே
கற்றவர்கள் கொண்டாடவருள்சுரந்து மடைதிறந்த
கமலக் கண்ணு
றனற்றமிழ்தேர்மகிழ்மாறன்திருவழுதிநாட்டுவளம்
நவிலக் கேளே 37

### நாட்டுவளம், சிந்து

பூசு சந்தகில் குங்கும மேலம்
புனைந்து வெள்ளப் பொருனை பெருக்கும்;
மாசி லாத மணிகள் கொழிக்கும்
மருங்கு தோறுங் கரும்பு செழிக்கும்;
மூசி வாளை வராலினம் பாயும்;
முழங்கு சங்கு சலஞ்சலஞ் சாயும்;
தேச மெங்கும் புகழ்ந்தினி தோங்கும்;
திருவ ழுதிநன் னாடெங்கள் நாடே, 38

செம்பொன் வேய்ந்த சிகரமனேகம்;
சிறந்த கோபுரங் கோவி லனேகம்;
அம்ப ரந்தொடுங் கப்ப மனேகம்;
அணிதிகழ் மாட கூட மனேகம்;
உம்பர் மேவிய மேருவொப் பாக
உயர்ப தாகையந் தேர்க ளனேகம்;
எம்பி ரான்குரு காபுரி வீறன்
எழில்வ ழுதிநன் னாடெங்கள் நாடே. 39

வைய மெங்கும் புகழுங் குறுங்குடி
மாதவன் காரி மாதவத் தாலே
செய்ய சேடா வதாரத் திருப்புளிக்
குள்ள மர்ந்த செழுங்கதி ராகித்

துய்ய நாலு மறைத்தமிழ் பாடித்
தொகுத்து நாத முனிக்கினி தாக
மெய்பு வந்து திருவாய் மலர்ந்தநா
வீறர் வாழ்திரு நாடெங்கள் நாடே. 40

தஞ்ச மென்றவர்க் கஞ்சலென் றோதுந்
தலமுந் தான சமயமும் யாவும்
பஞ்ச ராத்திர மந்திரத் துண்மை
பயிலும் நீதி யருச்சகர் யாரும்
மிஞ்சு நான்மறை யோர்க்குப தேசம்
விளம்பு கின்ற குருபீடத் தாரும்
செஞ்சொல் பாடிய நாவலர் யாரும்
சிறந்து வாழ்திரு நாடெங்கள் நாடே 41

ஆக மந்தனை யோதி யுணர்ந்தரு
ளாதி நான்மறை யந்தணர் வாழ்வும்,
ஓகை கூர வரசாளு மன்னவ
ரும்பர் கோவென விம்பரில் வாழ்வும்
நாக ரீக வணிகேசர் வாழ்வுடன்
நல்கு சூத்திர வல்லோர்கள் வாழ்வும்,
கூகை தென்குரு கூர்குரு கூரெனக்
கூவ வாழ்திரு நாடெங்கள் நாடே

பண்பு கூரும் வயிணவ ருண்ட
பரிகலச் சேடந் துய்த்துடன் பண்டு
நண்பு கூரும் பொருணையி லக்கரை
நாடி யேகப் பெருவெள்ளத் தாலே
விண்பு குதவி றந்த ஞமலியை
விமானத் தேகொண்டு விண்ணவ ரேகக்
கண்க ளித்த கருலூரத் தேவனும்
கைதொழுதநன் னாடெங்கள் நாடே, 42

மன்னு சூதங் கனிகள் சொரியும்
　　வனங்க டோறுங் கனங்கள் திரியும்
துன்னு சந்தகில் செண்பகம் புன்னை
　　துலங்கு மாதளை பாதிரி சூழும்
கன்னல் தோறுங் கதிர்முத் துதிர்க்கும்
　　கழனி தோறும் வளர்ந்த ததிர்க்கும்
சென்னெல் தோறுங் கயல்குதி பாயும்
　　திருவழுதிநன் னாடெங்கள் நாடே. 44

கொண்டல் தாவிய விண்டொடர் தண்டலை
　　கொஞ்சு பஞ்ச வனக்கிளி பேச
அண்ட முந்திறை கொண்டலை வேள்விரு
　　தாங்கி ருந்துதே மாங்குயில் கூவ
வண்டு விண்டலர் பூவுண்டு பாட
　　மடம்பு ரிந்திள மஞ்ஞைக ளாட
கண்டு புண்டரி கத்தா சன்னம்
　　களித்து வாழ்திரு நாடெங்கள் நாடே. 45

கொங்கு தங்கு மலர்ப்பொங்கர் தோறும்
　　குரங்கு பாய நிரம்பிய தேறல்
செங்க மலப்பொற் கிண்ணத்தில் வீழ்ந்து
　　செழும்பு னத்தி னடைந்தடர்ந் தேறும்
அங்க மைந்த வலம்புரி யீன்ற
　　அவிர்ம ணிவெண் மதியொளி சீறும்
மங்கை நங்கை மகிழ்மா றர் நாட்டின்
　　வளங்கள் யாவும் விளம்பரி தம்மே. 46

தலைவி கூறல், விருத்தம்

கண்டனைய மொழிகுழற நகைபுரிந்து விழிமருட்டிக்
　　கண்ணி சூட்டும்
கொண்டலெனுங் குழல்சரிய நாட்டுவள முரைத்த குறக்
　　கொடியே கேளாய்

வண்டுலவு தண்ணிலஞ்சி மாறனன்னப் பிடர்மீதில்
வந்திங் கென்பாற்
பண்டறியா மயலளித்தெ னிருகைவளை முழுதுமவர்
பறித்தா ரன்றே. 47

சிந்து

அன்னைஎன்னைவைவதனால் அன்னமருந்தேனே கன்கள்
பொருந்தேனே
மின்னனையார் சன்னைசொல்ல வாடிமெலிந்தேனே மோக
மெலிந்தேனே. 48

அந்திமதிவந்துபொரக் காதலாறுனேன் மேனிவேறுனேன்
சந்திதனிற்பங்கெதனவே நின்றுதிகைத்தேனேஊரும்பகைத்தேனே. 49

புந்திமிகநொந்துருகியாரம் புனையேனே வேறு நினையேனே
சிந்தைதமகிழ்ந்தன்புடனேமாறன்சேரானே ஆசை தீரானே. 50

ஆயர்வேயோதியாவே முன்றிலன்றிலிசையோயாவே
வாய்புலர்ந்து மெய்புலர்ந்து நெஞ்சம்வாடிமுகங்கோடிநின்றேன். 51

சேயிழந்த தாயானேனான் சிறகிழந்த புள்ளானேன்
தூயமகிழ் மாறர்வந்து தோய்வதென்றோ ஆயிழையே. 52

குறத்தி கூறல், விருத்தம்

சீதை மகிழ மணம்புணரத்
திருமால் வருவா ரென்றதுவும்
கோதை மாலைத் திருமார்பிற்
கொள்வா ரழக ரென்றதுவும்
காதை யலமுன் சொன்னகுறிக்
கன்னி யெமது விழிகண்டாய்
மாதே யெனது குறியினெறி
வைய மறியும் பொய்யாதே. 53

## குறத்தி தெய்வந்தொழுதல்

பச்சை முகில்போல் மேனியனே
பறவைக் கரசே பாஞ்சுடரே
உச்சிமலையிற் கன்னியரே
யொங்கு புகழ்கூர் வன்னியனே
வெச்சென் றெழுந்து கண்கறுத்து
விம்மிப் பணைத்த முலையாட்குக்
கொச்சைக் குறமான் புகலுமிந்தக்
குறியே குறியா யருள்வீரே. 54

## சிந்து

அல்லாருங் குழல்மாதே யிந்நிலத்தை மெழுகாய்
ஆழிசங்கத் தான்சேனை யரசைமுதற் பணிவாய்
வில்லாரு நுதலாரே திருவிளக்கு மிடுவா
மெய்ப்பாக நிறைநாழி முப்பழமுங் கொடுவா
கல்லார விழிமானே மணத்தசுருட் கொடுவா
காக்குமுங்கள் தெய்வதன்மை யாக்கந்தா வருமே
மல்லாருந் திண்புயத்துக் காரிதரு மாறன்
மலரணையி லணையுமின்று மருவுவன்கா ணம்மே 55

முற்றாத முலையாளே மோகமிகு மானே
முகமலர வெனதுகுறி யகமலரக் கேளாய்
கற்றார்கள் போற்றுதெய்வத் துடரிமலை வாழும்
கன்னிமா ராணைகுறி நன்னயமாச் சொல்வேன்
சிற்றாயர் மனையில்வெண்ணெய் திருடியுண்ட மாயன்
திருவாணை பிள்ளையொரு பதினாறும் பெறுவாய்
வற்றாத தண்பொருநைக் குருகைவரு மாறன்
மலரணையி லணையுமின்று மருவுவன்கா ணம்மே. 56

### விருத்தம்

பந்த மறையைத் தெரிந்து தமிழ்ப்
　　பாடுங் கவிநா வீறர் தம்மைச்
சிந்தை தனிலே நினைந்துருகுந்
　　தேனே மானே வருந்தாதே
இந்த மதலைக் கிடுகூழை
　　எனக்குப் பழைய துணிக்கூறை
தந்து வளைபூ ணுனதுகைநீ
　　தருவா யருகே வருவாயே. 57

### சிந்து

அம்மே, கைதருவாய் பெண்ணரசே கனியே யறுசுவையே
மைபாவுங் கண்ணாரே வடிவேசெங் கைதருவாய். 58

அம்மே, அஞ்சுகமே கிஞ்சுகவாய் அணங்கேயென் னாமுதே
கஞ்சமலர்ச் செந்திருவே கரும்பேயுன் கைதருவாய். 59

அம்மே, கானாரும் பூங்குழலே கண்ணே மரகதமே
தேனாரும் வாயாளே செங்காந்தட் கைதருவாய். 60

அம்மே, வாசமிகுந் தண்ணிலஞ்சி மலர்மாலை மார்பனின்று
நேசமுடன் சேர்வதற்கு நேரிழையே கைதருவாய். 61

### விருத்தம்

பூனை பருந்து காகநரி
　　புற்றி லாந்தை மற்றுமுள்ள
வூனை யருந்து மவர்மனையி
　　லுண்ணோ மமுத மளித்தாலும்
ஆனை மூல மெனவழைத்த
　　ஆதிக்குருகைப் பொலிந்து நின்றார்
தானை வழுத்துங் குறவர் குலத்
　　தமியேற் குன்கை தருவாயே. 62

## சிந்து

செப்பாரும் வனசமலர்த் திருவேவந் திருகேள்
சிறந்தநவ மணிக்கடகஞ் செறிக்குமிந்தக் கையே
எப்போதும் மாயனடி யிணைபாவுங் கையே
எல்லோர்க்கும் பரிந்தமுத மிடுவதிந்தக் கையே. 63

குங்குமமுஞ் சந்தனமுங் குழைக்குமிந்தக் கையே
கூசாம லாடைசெம்பொன் கொடுக்குமிந்தக் கையே
பொங்குநறு மலர்தெரிந்து புனையுமிந்தக் கையே
புகழ்மாறன் துணரிலஞ்சிப் புயந்தழுவுங் கையே. 64

## விருத்தம்

கொங்கைக் குறியும் முகக்குறியுங்
    கூறும் பல்லி சொல்குறியும்
அங்கைக் குறியும் மெய்க்குறியும்
    ஆந்தை குறிக்குங் குறியுமெண்ணில்
பங்கைக் காசே யிந்நிமித்தம்
    வழுவா தினிநீ மலங்காதே
நங்கைக் கினிய மகிழ்மாறர்
    நாளை புனைவந் தணைவாரே. 65

விரியுங் கதிர்மேற் கெழுந்தாலும்
    விளங்கு மதிமேற் கெழுந்தாலும்
சொரியு மணிக்கா ரிற்றாலும்
    சூழ்ந்த கடனீ ரற்றாலும்
தெரியுந் தமிழ்தேர் நாவினர்
    சேர்வா ருண்மை சோராதிங்
கரிமென் றுணர்ப்பூங் கருங்குழலாய்
    வாபே ருரைநான் பாடுதற்கே. 66

சிந்து

வண்டுகிண்டு மிலஞ்சிமன்னன் பேரைச் சொல்லாய் பாட நான்
வடித்ததமிழ் நாவீறன் பேரைச்சொல்லாய் பாட நான்
கொண்டல்தவழ் குருகூரன் பேரைச்சொல்லாய் பாடநான்
குறையாத தமிழ்முனிவன் பேரைச்சொல்லாய் பாடநான்
தொண்டர்புகழ் சடகோபன் பேரைச்சொல்லாய் பாடநான்
தொடரிமலைக் காவலவன் பேரைச்சொல்லாய் பாடநான்
தெண்டிரைச் சங்கணித்துறைவன் பேரைச்சொல்லாய் பாடநான்
திருவழுதி வளநாட ன்பேரைச்சொல்லாய் பாட நான். 67

விருத்தம்

பூமாது போலவிந்தப் புவிமாது தழைத்தினிய
புகழா லோங்கி
மாமாலை நோக்கியுள்ளம் வருத்தியறி விழுக்தமட
மயிலே கேளாய்
தேமாவின்பொழில்புடைசூழ்தென்குருகைவருகாரி
செல்வன் கல்விப்
பாமாறன் எம்பிரான் திருநாமந் தனைப்புகழ்ந்து
பாடுகேனே. 68

சிந்து.

காரியரு ளாமுத வேரிமகிழ் பருதி
காசினியெல் லாம்புகழு மீசனியல் நேசன்
வாரிபுடை சூழுலக மோரடியி லளந்த
மாயனிரு சரணமலர் தோயமறை புனைவோன். 69

ஆசுகவி வாய்மலர்ந்து பேசுகவி ராசன்
அண்ணலயன் முதலமார் எண்ணரிய வுரவோன்
வாசமலர் சூழுமெதி ராசமுனி நாதன்
வைத்தபடி மாறுத மொய்த்ததவ போதன். 70

நாடாளும் பரசமயங் காடாள விடுத்து
நாதவிதிப் படிதமிழை வேதவிதிப் படியே
சேடாவ தாரமெனும் திருப்புளியைச் சூழ்ந்த
திருப்பதிநூற் றெண்மர்கட்கும் விருப்பமுட
னளித்தோன். 71

திங்கண்மல ரானனமுஞ் செங்கனிவாய் மலருந்
திருஞான முத்திரையும் திருமேனி யழகுங்
குங்குமசந் தனகளப மூங்கியமார் பழகுங்
கொத்தலர்பூந்த ளிலஞ்சிமொய்த்தபுயவரையும் 72

இணங்கியபே ரழகுகண்டா லிருவிழி போதாவே
இந்திரன்போ லாயிரங்கண் தந்திலனே பிரமன்
வணங்கவென்று விருகையினால் வணங்கமுடியாதே
வாணனைப்போலாயிரங்கைவேணுமெனக்கினியே 73

திருநாம மொருநாவில் வாழ்த்தவமை யாதே
சேடனைப்போ லாயிரநா வோடுபிறந் திலனே
மருவாருந் திண்புயத்தான் காரிதரு மாறன்
வண்மையெலா மறிந்தெனக்கு முண்மைசொல்வா
ரரிதே. 74

கோதில்லாப் பசுந்தேனே கோமளப்பெண் கொடியே
கொஞ்சுபஞ்ச வனக்கிளியே கோகிலமே கேளாய்
தீதில்லா வருட்கடவுள் தமிழ்க்குருகை யாழ்வார்
செம்மையுட னேயுமின் றுசேருவர்காணம்மே. 75

குறத்தி வாழ்த்தல், விருத்தம்

வாரிலங்கு முலைகுழைய விருவிழிகள் மாருட
வளைக ளார்ப்ப
ஏரிலங்த குருகைநகர் வருகாரி மாறருனை
யிணங்கி நாளும்
காரிலங்குதிருமேனிக்கண்ணனும்பொன்மலர்மாதும்
கலந்த வாபோற்
சீரிலங்கு பிள்ளையொரு பதினாறும் பெறுவையம்மே
திண்ணந் தானே. 76

### வாழி, சிந்து

நச்சரவி னுச்சிதனில் நடித்தபெரு மாயன்
நாமமே வாழ்த்தியென்று நாமமே வாழ்வோம்
கொச்சையிளங் குறமாது குறம்பாடி வந்த
குருகைநகர் வாழியித்தக் குவலயங்கள் வாழி. 77

மாலாதிநாதர்திரு சேவடிகள் வாழி
மலர்மாது வாழிதிரு மகிழ்மாறன் வாழி
நாலாயி ரந்தமிழும் நான்மறையும் வாழி
நாதமுனி மதுரகவி யெதிராசன் வாழி. 78

தங்கொழுத பங்கயத்தாள் மாலைமணி மார்பர்
தானசம யத்தோடு தலத்தாசர் வாழி
ஆதரவு புரிந்தருளும் மாதவர்கள் வாழி
அன்புறுசொல் நாவலவ ரின்புறவா ழியவே. 79

திருக்குருகூர் மகிழ்மாறன்
பவனிக்குறம் முற்றிற்று.

ஸ்வாமி தெற்குத் திருவேங்கடமுடையான் துணை.

# திருஞாந முத்திரைப் பிரசுராலயம்

## வெளிப்படுத்திய நூல்கள்.

திருஞாநமுத்திரைக்
கோவை:-

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | "சுவாமி நம்மாழ்வார் நூற்றெட்டுத்திருப்பதித் தாலாட்டு" உபயகவி அப்பா இயற்றியது: ஸந்நிதி மார்கழி உத்ஸவத்தில் சேவிக்கப்பட்டுவருகிறது. | 0 | 4 | 0 |
| 2 | "ஸ்ரீ சடகோபன் சந்திரகலாமாலை" ஸ்ரீ உ. வே. அனந்தய்யங்கார் ஸ்வாமி இயற்றியது. | 0 | 1 | 0 |
| 3 | "ஸ்ரீ சடகோப திவ்ய சரித்திரம்" ஸ்ரீ உ. வே. தேவராஜபாரதிகளியற்றியது, சுதேசமித்ரன், ஹிந்து, செந்தமிழ் இவைகளாலும் அகஸ்தியதாஸன், வாணிதாஸன், முதலியவர்களாலும் மதிக்கப்பெற்றது. நம்மாழ்வார் வைபவங்களை சுமார் 1200 பாசுரங்களால் காவியநடையில் விஸ்தாரமாகக்கொண்டது. | 2 | 0 | 0 |
| 4 | பெரியவாச்சான்பிள்ளை அருளிய "ஸ்ரீ இராமாயணச் சுருக்கம்" நித்ய சேவைக்குரியது. | இனம். | | |
| 5 | "தொலைவில்லிமங்கலம் தேவர்பிரான்பேரில் சந்திரகலாமாலை". ஸ்ரீ உ. வே. தேவராஜபதிகளால் இயற்றப்பெற்றுபலவித்வான்கள்சாற்றுக்கவிகளுடன்கூடியது. | 0 | 1 | 0 |
| 6 | "நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்" வாணிதாஸர்முகவுரையுடன் "மாயக்கூத்தன்" போற்றியது | 0 | 4 | 0 |
| 7 | திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்: பழைய சுவடியிலிருந்து எடுத்தெழுதி வெளியிடப்பட்டது. | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம்:—

பெரியன், வெ. நா. ஸ்ரீநிவாஸன்
சொந்தக்கார காரியஸ்தன்
திருஞானமுத்திரைப்பிரசுராலயம்
ஆழ்வார்திருநகரி.

---


## கானவித்யா ப்ரகாசினி

1931-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் வெளியாகிவருகிறது.

ஸங்கீத சாஸ்திரம், கீர்த்தனங்களுக்கு பதவுரை, பொழிப்புரை, ஸ்வரங்கள், கற்பனாஸ்வரங்கள், வேதாந்தம், ஜோதிடம், விகடம், நாவல், வைத்தியம், இலக்கியகட்டுரை, இன்கவித்துணர் முதலிய பல அரிய விஷயங்களுடன் வெளிவருவது.

மாதிரி காப்பிக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

உள்நாடு சந்தா ரூ. **1—8—0** வெளிநாடு சந்தா ரூ. **2—0—0**

கானவித்யா ப்ரகாசினி ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம் S. I. Ry.

# பிழை திருத்தம்.

| பக்கம் | பாடல் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| 1 | 3 | 7 | தங்கள் முனியான் | தங்கள்முன்யான் |
| 3 | 9 | 3 | கலங்தோன் | களங்தோன் |
| 3 | 10 | 4 | வுணக்கொளியோன் | வுணக்களியோன் |
| 4 | 16 | 3 | கறுங் | நறுங் |
| 5 | 18 | 1 | அரிபி—வும் | அரிபிணவும் |
| 6 | 27 | 1 | வரைநதாய் | வரைந்தாய் |
| 6 | 27 | 2 | அயனவில் | அழலில் |
| 7 | 31 | 4 | பாவுளிஞ்சி | மாவுழிஞ்சி |
| ,, | ,, | ,, | படரு | வடரு |
| ,, | 32 | 4 | ஞானவ | ஞாழல் |
| ,, | 34 | 1 | கொழிஞ்சி | கொழிமிஞ்சி |
| ,, | 35 | 2 | பொதியமா | பொதியமெனும் |
| 7 | 37 | 5 | றனற்றமிழ் | ணற்றமிழ் |
| 9 | ,, | 20 | — | 42 |
| 9 | 43 | 2 | பண்டு | மீண்டு |
| | | 28 | 42 | 43 |
| 10 | 44 | 4 | மாதளை | மாதுளை |
| 11 | 47 | 4 | மயலளித்தெணி | மயலளித்தும் |
| | 47 | 4 | மெலிக்கேதேனே | மலிக்கேதனே |
| 53 | 53 | 5 | குறிக் | குறக் |
| 12 | 54 | 3 | உச்கி | உச்சி |
| 14 | 66 | 3 | மளைக்கா | மழைக்கா |
| 14 | 66 | 22 | சோராதிங் | சோராதே |
| | | 23 | கரிமென் | வரிமென் |
| 16 | 72 | 4 | கொத்தலர்பூந்தணி | கொத்தலருந்தண்ணி |

ஸ்வாமி தெற்குத் திருவேங்கடமுடையான் துணை.

# திருஞாந முத்திரைப் பிரசுராலயம்

## வெளிப்படுத்திய நூல்கள்.

| திருஞானமுத்திரைச் சோலை:- | | ரூ. அ. பை. |
|---|---|---|
| 1 | "ஸ்வாமி நம்மாழ்வார் நூற்றெட்டுத்திருப்பதித் தாலாட்டு" உபயகவி அப்பா இயற்றியது: இது மார்கழி உத்ஸவத்தில் சேவிக்கப்பட்டுவருகிறது. | 0 4 0 |
| 2 | "ஸ்ரீ சடகோபன் சந்திரகலாமாலை" ஸ்ரீ உ. வே. அனந்தய்யங்கார் ஸ்வாமி இயற்றியது. | 0 1 0 |
| 3 | "ஸ்ரீ சடகோப திவ்ய சரித்திரம்" ஸ்ரீ உ. வே. தேவராஜபாரதிகளியற்றியது, சுதேசமித்திரன் பத்திரிகை, செந்தமிழ் இவைகளாலும் அகஸ்தியதாஸன், வாணிதாஸன், முதலியவர்களாலும் மதிக்கப்பெற்றது. நம்மாழ்வார் வைபவங்களை சுமார் 1200 பாசுரங்களால் காவியநடையில் விஸ்தாரமாகக்கொண்டது | 2 0 0 |
| 4 | பெரியவாச்சான்பிள்ளை அருளிய "ஸ்ரீ இராமாயணச் சுருக்கம்" நித்ய சேவைக்குரியது. | இனாம் |
| 5 | "தொலைவில்லிமங்கலம் தேவர்பிரான்பேரில் சந்திரகலாமாலை" ஸ்ரீ உ. வே. தேவராஜபாரதிகளால் இயற்றப்பெற்றுபலவித்வான்கள்சாற்றுக்கவிகளுடன்கூடியது. | 0 1 0 |
| 6 | "நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்" வாணிதாஸர்முகவுரையுடன் "மாயக்கூத்தன்" போற்றியது | 0 4 0 |
| 7 | திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்: பழைய சுவடியிலிருந்து எடுத்தெழுதி வெளியிடப்பட்டது. | 0 4 0 |

கிடைக்குமிடம்:—

பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாஸன்

சொந்தக்கார காரியஸ்தன்

திருஞானமுத்திரைப்பிரசுராலயம்

ஆழ்வார்திருநகரி.

---


## ஞானவித்யா ப்ரகாசினி

1931-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் வெளியாகிவருகிறது.

சங்கீத சாஸ்திரம், கீர்த்தனைகளுக்கு பதவுரை, பொழிப்புரை, ஸ்வரங்கள், கற்பனாஸ்வரங்கள், வேதாந்தம், ஜோதிடம், விகடம், நாவல், வைத்தியம், இலக்கியக்கட்டுரை, இன்கவித்துணை முதலிய பல அரிய விஷயங்களுடன் வெளிவருவது.

மாதிரி காப்பிக்கு ஸ்டாம்பு கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

உள்நாடு சந்தா ரூ. **1-8-0** வெளிநாடு சந்தா ரூ. **2-0-0**

ஞானவித்யா ப்ரகாசினி ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம் S. I. Ry.

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை